சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 29.07.2025
பி.வா.சா.1 -சௌந்திரபாண்டியன் S/o சேதுராமகிருஷ்ணன்
O.S No.67/2022 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என் தந்தைக்கும் என் சித்தப்பாவான ராஜமாணிக்கத்திற்கும் இடையே உழவடை பாத்தியம் தொடர்பாக மதுரை கூடுதல் 6வது மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. எனக்கும், பொன்னுசாமி என்ற நபருக்கும் இடையே மதுரை கூடுதல் 5வது மாவட்ட நீதிமன்றம் முன்பாக சொத்து சம்பந்தமாக வழக்கு நடந்து வருகிறது என்றால் இல்லை. குணசேகரன் என்ற வனஅலுவலரை தெரியுமா என்றால் தெரியும். குணசேகரன் என்றநபருக்கும் எனக்கும் இடையே நிலம் தொடர்பான வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி குணசேகரனுக்கம் எனக்கும் இடையே இதேபோல் சொத்து கிரையம் முடிப்பது தொடர்பாக கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு, அதை நான் மறுத்து வழக்கு நடந்து வருகிறது என்றால் சரியல்ல, ஈடுகடன் தொடர்பாக வழக்கு நடந்து வருகிறது. குணசேகரன் என்பவருக்கு நான் பணத்தை கொடுக்க தயாராக இல்லை என்றால் நாங்கள் பணத்தை கொடுக்க தயாராக இருக்கிறோம் ஆனால் அவர் நிலம் வேண்டுமென்று கேட்டு வருகிறார். நானும் இந்த வழக்கின் வாதியான அழகர் என்பவரும் ஒரே ஊரில், ஒரே தெருவில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் இடையே மிகவும் நெருங்கிய பழக்கம் இல்லை என்றால் சரிதான். அவர் வேறொரு சமுதாயம், நான் வேறு சமுதாயம் என்றால் சரிதான். என்னுடைய மகளும், வாதியின் மகளும் நெருங்கிய தோழிகள் என்றால் இல்லை. என்னுடைய மகள் சௌமியா Dpharm படித்துள்ளார். வாதியின் மகள் மருத்துவ படிப்பு படித்துள்ளார் என்றால் தெரியாது. என்னுடைய மகள் ultra college, Annanagar, மதுரையில் படித்தார். என் மகள் சௌமியாவிற்கு

23.01.2022ம்தேதி திருமணம் ஆனது. என் மகள் Dpharm படிப்பை முடிக்கவில்லை என்றால் சரியல்ல, முடித்துவிட்டார். நான் வாதிக்கு 19.01.2022ம் ஆண்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் நான் கிரைய ஒப்பந்தம் பவாதியோடு ஏற்படுத்தி கொண்டது உண்மை என்று ஒப்புகொண்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பெயரளவில் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 4,5,6பத்திகளில் பணம் வட்டிக்காக செலுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளதற்கு கணக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் கிரைய தொகை பேசப்பட்டது 7லட்சமாக இருந்தாலும் உண்மையில் பெறப்பட்டது 3 லட்சம் என்பதற்கு கணக்கு வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஒப்பந்தமானது வா.சா.ஆ.1ன் அடிப்படையில் 22.10.2019 அன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தி கொண்டதற்கான நோக்கம் வா.சா.ஆ.3ன் படி குடும்ப செலவு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 3 லட்சம் ரூபாய் பெற்றதாக சொல்லப்படும் தொகை திருப்பி செலுத்துவதாகவோ, மாததவணைகளில் திருப்பி செலுத்துவதாகவோ ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோமா என்றால் இல்லை.வா.சா.ஆ.3ல் 4வது பத்தியில் 22.04.2012 அன்று ரூ.17,500ஐ திருப்பி செலுத்தி கடனை தீர்த்துவிட்டேன் என்றும் அப்போது ரசீது கேட்கப்பட்டதற்கு ரசீது கொடுக்கப்படவில்லை என்று மறுத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலும் மேற்படி விபரத்தை தான் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் எந்த தேதிகளில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்ற விபரத்தை வழக்கறிஞரிடம் நான் எழுதி வைத்துள்ள விபத்தை வைத்து குறிப்பிட்டு சொன்னேன். மேற்படி குறிப்பு என்னிடம்

உள்ளதா என்றால் உள்ளது வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். மேற்படி குறிப்பை இதுவரை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞர் கேட்கவில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய மகளின் திருமணம் வரை வாதிக்கும், எனக்குமான உறவு சுமுகமாக இருந்தது என்றும் என் மகளின் திருமணத்திற்கு வரும் மொய்பணத்தை வைத்து, பணத்தை திருப்பி செலுத்திவிடுவதாக வாக்குறுதி அளித்தேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய தொகை 5 லட்சம் ரூபாயை வட்டியோடு சேர்த்து செலுத்துவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி தொகையை செலுத்துவதாக ஒப்புகொண்டு நீதிமன்ற நடவடிக்கைகள் தெரிந்ததால் சூழ்ச்சியின் காரணமாக அவர் அறிவிப்பு கொடுக்கும் முன்னரே நான் அறிவிப்பு கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய வா.சா.ஆ.3 அறிவிப்பில் ஒப்பந்தத்தை ரத்து செய்ய தவறிவிட்டால் அவர் மீது கந்துவட்டி தடை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டி வா.சா-ஆ.3 ஆவணத்தில் கேட்டிருக்கிறேனா என்றால் கேட்கவில்ரைல. வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்யவேண்டி வழக்கு ஏதேனும்தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இதுவரை செய்யவில்லை. நான் வழக்கு சொத்தை கிரையம் பேசி முடிப்பதாக ஒப்புகொண்டு வாதியிடம் 5 லட்சம் ரூபாய் பெற்று கொண்டு அதன்பின்னர் வழக்கு சொத்து மதிப்பு கூடுதலாக இருப்பதால் கிரையம் கொடுக்க மறுத்து தற்போது பொய் கட்சியாடி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மகளின் சிபாரிசின் காரணமாக என்னுடைய மகளின் படிப்பு செலவுக்காக தான் 5 லட்சம் ரூபாயை வாதி என்னிடம் வழங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் பத்திரம்(வா.சா.ஆ.2)ல் உள்ள பகுதி சொத்தை மட்டுமே வா.சா.ஆ.1ல் விற்பனை செய்வதாக ஒப்பந்தம் ஏறப்டுத்தி இருக்கிறேன் என்றால் சரிதான்.

வாதியே பெருந்தன்மையாக சொத்து வேண்டாம் என்று கருதி கொடுத்த முன்பணத்தை திருப்பி கொடுக்கவேண்டும் என்று தாக்கல் செய்திருக்கிறார் என்றும் அதை நான் வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வாசா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள தொகையை வாதியிடம் திருப்பி கொடுத்து கடனை தீர்த்துவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதற்கு சாட்சிகளோ, ஆவணங்களோ இருக்கிறதா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.29 18:51:38 +0530

Sub Judge

Melur